பக்கங்கள் 20+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | ஆனி 10 செவ்வாய்க்கிழமை 24.06.2025 | அதிர்வு 325

## கனடா பறந்தார் பிரதமர் ஹரிணி



பொதுநலவாய நாடுகளின் கற்றல் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகப் பிரதமர்

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




### மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரி

# இரண்டாவது நாளாகவும் செம்மணியில் தொடர்ந்து எரியும் ‘அணையா விளக்கு’

## தமிழரசுக் கட்சியினர் இன்று நேரில் ஆதரவு தெரிவிப்பு

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ். செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரிய ‘அணையா விளக்கு’ போராட்டம் இன்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைக்குழிக்குச் சர்வதேச விசாரணை கோரி மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில் ‘அணையா விளக்கு’ எனும் மூன்று நாள் தொடர் போராட்டம் யாழ். நல்லூர் வளைவுக்கு அருகில் நேற்றுக் காலை ஆரம்பமானது.

போராட்டத்தின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று காலை 10 மணியளவில் மலர் அஞ்சலியுடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து சர்வ மதத் தலைவர்களின் நீதியுரையும் இடம்பெற்றது.

02



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரண்டாவது நாளாகவும்...**

இன்றைய தினம் இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் வருகை தந்து இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தார்கள். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் கட்சியின் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக இரவு வேளைகளில் கதை படித்தல், ஆவணப்பட திரையிடல், தெருவெளி நாடகம் என்பன இடம்பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இறுதித் தினமான நாளை நடைபெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்தில் வடக்கு, கிழக்கில் இருந்து பெருமளவிலானோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
















**கனடா பறந்தார்...**

கலாநிதி ஹரிணி அமரசூரிய இன்று அதிகாலை கனடாவுக்கு உத்தியோ-கபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் கற்றல் ஆலோசனைக் குழுக் கூட்டம் ஜுன் 24 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை கனடாவின் வான்கூவர் நகரத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களின் கல்வி, உயர் கல்வி உயர்கல்வி, கல்வி அபிவிருத்திகள், டிஜிட்டல் மயமாக்கல் ஆகியவை தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் நிறுவனங்களில் டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல், பாலின சமத்துவம், அபிவிருத்திக்கான முதலீடு ஆகியவை தொடர்பில் விவாதங்கள் மேற்கொள்ளப் படவுள்ளன.



# மன்னார் பிரதேச சபையில் ‘திசைகாட்டி’யுடன் சேர்ந்து தமிழரசை வீழ்த்திய ‘சங்கு’

## ரிஷாத்தின் அணிக்குத் தவிசாளர் பதவியையும் பெற்றுக்கொடுத்தது

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியை வீழ்த்தியுள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்குத் தவிசாளர் பதவியையும் பெற்றுக்கொடுத்துள்ளது.

மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு இன்று காலை 8.30 மணியளவில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் கிறிஸ்ரி றெவல் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஏ.ஜே.எம். ஜப்ரான் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இதன்போது சபையில் உள்ள 22 உறுப்பினர்களும் பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினர்.

பகிரங்க வாக்களிப்புக்கமைய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் கிறிஸ்ரி றெவலுக்கு ஆதரவாக 9 வாக்குகளும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஏ.ஜே.எம்.ஜப்ரானுக்கு ஆதரவாக 13 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதற்கமைய அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஏ.ஜே.எம்.ஜப்ரான் மன்னார் பிரதேச சபையின் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து உப தவிசாளர் தெரிவு இடம்பெற்றது. இதன்போது உப தவிசாளர் தெரிவுக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் றொயிட்டன் சாந்தினி குரூஸ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் இஸ்மாயில் முஹம்மது இஸ்ஸதீன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இதன்போது 22 உறுப்பினர்களும் பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினர்.

பகிரங்க வாக்களிப்புக்கமைய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் றொயிட்டன் சாந்தினி குரூஸுக்கு 15 வாக்குகளும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் இஸ்மாயில் முஹம்மது இஸ்ஸதீனுக்கு 7 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதற்கமைய மன்னார் பிரதேச சபையின் உப தவிசாளராக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் றொயிட்டன் சாந்தினி குரூஸ் தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய மக்கள் சக்தி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், சுயேச்சைக் குழு ஆகியவற்றின் உறுப்பினர்களும் ஆதரவு வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.













# ரிஷாத் அணி, 'திசைகாட்டி'யின் ஆதரவுடன் மன்னார் நகர சபையைக் கைப்பற்றிய 'சங்கு'

## நகர பிதாவாக டானியல் வசந்தன் தெரிவு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் மன்னார் நகர சபையின் ஆட்சி அதிகாரத்தை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கைப்பற்றியுள்ளது.

நகர பிதாவாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் டானியல் வசந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதேவேளை, துணை நகர பிதாவாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உறுப்பினர் நூர் முகம்மது முகம்மது உசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் நகர சபையின் நகர பிதா மற்றும் துணை நகர பிதாவைத் தெரிவு செய்வதற்கான அமர்வு இன்று முற்பகல் 11.30 மணியளவில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் மன்னார் நகர சபையில் நடைபெற்றது.

இதன்போது நகர பிதாவைத் தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் டானியல் வசந்தன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

சபைக்குத் தெரிவாகியுள்ள 16 உறுப்பினர்களில் 15 உறுப்பினர்கள் இன்றைய அமர்வுக்கு வருகை தந்ததோடு, ஓர் உறுப்பினர் வருகை தரவில்லை.

நகர பிதா தெரிவில் அதிக உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினர்.

அமர்வில் கலந்துகொண்ட 15 உறுப்பினர்களில் 14 உறுப்பினர்கள் வாக்களித்தனர். ஓர் உறுப்பினர் நடுநிலை வகித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சனுக்கு 6 வாக்குகளும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் டானியல் வசந்தனுக்கு 8 வாக்குகளும் கிடைத்தன.

அதற்கமைய கூடிய வாக்குகளைப் பெற்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் டானியல் வசந்தன் மன்னார் நகர சபையின் நகர பிதாவாகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய மக்கள் சக்தி கட்சிகளின் உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து துணை நகர பிதா தெரிவு இடம்பெற்றது.

துணை நகர பிதா தெரிவுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உறுப்பினர் நூர் முகம்மது முகம்மது உசன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சோமநாத் பிரசாத் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இதன்போது கூடுதலான உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினர்.

வாக்களிப்பில் இரண்டு உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் நூர் முகம்மது முகம்மது உசன் 8 வாக்குகளையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் சோமநாத் பிரசாத் 5 வாக்குகளையும் பெற்றனர்.

அதற்கமைய கூடுதல் வாக்குகளைப் பெற்ற நூர் முகம்மது முகம்மது உசன் மன்னார் நகர சபையின் துணை நகர பிதாவாகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி கட்சிகளின் உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தெரிவுகளின்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் உள்ளிட்ட பலர் வருகை தந்திருந்தனர்.











# திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் ஆட்சி தமிழரசு வசம்

## தவிசாளராக வெள்ளைத்தம்பி சுரேஷ்குமார் தெரிவு

(எஸ்.கீதபொன்கலன், எச்.ஏ.ஹலீம்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது.

இன்று மாலை கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்ற அமர்வில் தவிசாளருக்கான தெரிவின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட வெள்ளைத் தம்பி சுரேஷ்குமார் 16 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அவர் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் டி.எச்.எஸ்.சத்துர லக்மாலைவிட 12 அதிக வாக்குகளைப் பெற்றார்.

இதையடுத்து உப தவிசாளருக்கான தெரிவின் போது சுயேச்சைக் குழு உறுப்பினர் கயிலைநாதன் வயிரவநாதன் 9 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஏ.எல்.எம்.நௌபர் 7 வாக்குகளைப் பெற்றார்.

20 ஆசனங்களைக் கொண்ட திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையில் முறையே இலங்கைத் தமிழரசுக் கட்சி 6, தேசிய மக்கள் சக்தி 4, ஜனநாயகத் தமிழ்க் தேசியக் கூட்டணி 3, ஐக்கிய மக்கள் சக்தி 2, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 1, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 1, சுயேச்சைக் குழுக்கள் 3 என்ற வகையில் உறுப்பினர்களைப் பெற்றிருந்தன.











# குச்சவெளி பிரதேச சபை முஸ்லிம் காங்கிரஸ் வசம்

## தவிசாளராக முபாரக் தெரிவு

(எஸ்.கீதபொன்கலன், எச்.எம்.ஹலால்தீன்)

இன்று காலை குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்யவதற்கான கூட்டம் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்றபோதே சபையின் ஆட்சி அதிகாரத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுக்கொண்டது.

இந்தச் சபையின் 9 உறுப்பினர்களின் ஆதரவுடன் தவிசாளர் பதவிக்காகப் போட்டியிட்ட அயினியாப்பிள்ளை முபாரக் வெற்றி பெற்றார்.

தவிசாளர் தெரிவு பகிரங்க வாக்கெடுப்பின் மூலமாகவா அல்லது இரகசிய முறையிலா நடைபெற வேண்டும் என ஆணையாளர் கேட்டார். இத்தருணம் தனக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளது எனவும், எனவே இரகசிய வாக்கெடுப்பு வேண்டும் எனவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் அப்துல் மனாப் றிஷான் கூறினார். இந்தக் கருத்தை அவரது கட்சியின் ஏனைய மூன்று உறுப்பினர்களும் கூறினர். அத்துடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும் இரகசிய வாக்கெடுப்பைக் கோரினர். ஆனால், சபையில் இருந்த ஏனைய 10 உறுப்பினர்களும் பகிரங்க வாக்கெடுப்பை நடத்தும்படி கேட்டுக்கொண்டனர்.

இதையடுத்துப் பெரும்பான்மையானவர்களின் கருத்தைத் தாம் ஏற்பதாக ஆணையாளர் கூறி வாக்கெடுப்பை ஆரம்பித்தார். அவ்வேளை இரகசிய வாக்கெடுப்பைக் கோரிய 6 உறுப்பினர்களும், மேலும் ஒரு இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினரும் வாக்கெடுப்பு இரகசிய முறையில் நடத்தப்படாதமையை ஆட்சேபித்து சபையில் இருந்து வெளியேறினர்.

இதற்கு முன்னர் தவிசாளருக்கான முன்மொழிவை முன்வைக்குமாறு சபையினரை ஆணையாளர் கோரிய போது அப்துல் மனாப் றிஷானின் பெயர் முன்மொழியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி அ.முபாரக்வுடன் இவர் போட்டியிட இருந்தார்.

இந்தச் சபையில் 17 ஆசனங்கள் உள்ளன. இதன்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 5, இலங்கைத் தமிழரசுக் கட்சி 4, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 4, ஐக்கிய மக்கள் சக்தி 2, தேசிய மக்கள் சக்தி 1, சுயேச்சைக் குழு 1 என்ற எண்ணிக்கையில் உறுப்பினர்கள் தெரிவாகி இருந்தனர்.

இந்த உறுப்பினர்களில் ஶ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் 5 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தியின் 2 உறுப்பினர்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஓர் உறுப்பினரும், சுயேச்சைக் குழு உறுப்பினர் ஒருவரும் அ.முபாரக்கக்குக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தொடர்ந்து உப தவிசாளர் தெரிவு பற்றிய அறிவிப்பை ஆணையாளர் வெளியிட்ட போது சபையை 15 நிமிடங்கள் ஒத்திவைக்குமாறு சபையில் இருந்த 8 உறுப்பினர்களும் புதிய தவிசாளரைக் கேட்டனர். இதையடுத்து 15 நிமிடங்கள் சபை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் சபை கூடிய போது உப தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் வகர்தீன் மொஹமட் றிஷாத்தின் பெயர் பிரேரிக்கப்பட்டது. வேறு பிரேரணைகள் இல்லாத நிலையில் அவர் உப தவிசாளராகத் தெரிவானார். அந்தத் தருணம் ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றுமொரு உறுப்பின் இந்தத் தெரிவை ஆட்சேபித்து சபையை விட்டு வெளியேறினார்.

இந்தச் சபையில் தமது இரு கட்சிகளும் இணைந்து ஆட்சியமைப்பது என்று சில வாரங்களுக்கு முன்னர் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பன இணைந்து ஒப்பந்தம் செய்திருந்த போதும், அந்த ஒப்பந்தத்துக்கு மாற்றமாக இந்தச் சபையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு உப தவிசாளர் பதவி தற்போது வழங்கப்பட்டுள்ளது.













# மாந்தை மேற்கு பிரதேச சபை ஆட்சி அதிகாரமும் ‘சங்கு’ வசம்

## தவிசாளரானார் ஞானப்பிரகாசம் பிரேம்குமார் உப தவிசாளரானார் ‘திசைகாட்டி’ உறுப்பினர்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாந்தை மேற்கு பிர தேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு இன்று பிற்பகல் 2.30 மணியளவில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் மாந்தை மேற்கு பிரதேச சபையில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் ஞானப்பிரகாசம் பிரேம்குமார் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் செபமாலை கமலச்சந்திரன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இதன்போது சபையில் உள்ள 21 உறுப்பினர்களில் ஓர் உறுப்பினர் கலந்துகொள்ளவில்லை.

ஏனைய 20 உறுப்பினர்களும் கலந்து கொண்டு பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினர்.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் செபமாலை கமலச்சந்திரன் 5 வாக்குகளையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் ஞானப்பிரகாசம் பிரேம்குமார் 15 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தநிலையில், அதிகூடிய வாக்குகளைப் பெற்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் ஞானப்பிரகாசம் பிரேம்குமார் மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்கு தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, தொழிலாளர் கட்சி ஆகியவை ஆதரவு வழங்கின.

மேலும் உப தவிசாளர் தெரிவு இடம்பெற்றபோது தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நிஸாம் நிஜாத் போட்டியின்றி உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.






நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வாய்ச் சவடால் மிரட்டல்கள்

“சிறைத் துறையில் நிலவுகின்ற முறைகேடுகள், ஊழல்கள் போன்றவற்றை நீங்களாகக் களைய வேண்டும் அல்லது விளைவுகளை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.”

- இவ்வாறு சிறைத் துறையின் மூத்த அதிகாரிகளிடம் நேரடியாக தெரிவித்திருக்கின்றார் நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார.

நீதி அமைச்சில் நேற்று சிறைத் துறை அதிகாரிகளுடன் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் இப்படி வெளிப்படையாக எச்சரித்திருக்கிறார் நீதி அமைச்சர்.

சிறைத்துறையில் நேர்மையான அதிகாரிகள் இருக்கின்றமையை ஒப்புக்கொண்ட அமைச்சர் நாணயக்கார, அதே சமயம் அந்தத் துறையின் பெயரை கெடுப்பதற்கு என்றே சில கறுப்பு ஆடுகளும் நிலையெடுத்திருக்கின்றன என விசனத்துடன் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

அவ்வப்போது வழங்கப்படும் ஜனாதிபதியினதும் மற்றும் பொது மன்னிப்புக்களை பயன்படுத்தி சிறைச்சாலை கண்காணிப்பாளர்கள் குற்றவாளிகளை தம் இஷ்டப்படி விடுவிப்பது பெரும் அதிகார துஷ்பிரயோகம் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

சில அதிகாரிகளின் ஊழல் நடவடிக்கைகள் முழு துறையின் நற்பெயரையும் கெடுத்துவிட்டன என்று அமைச்சர் நாணயக்கார குறிப்பிட்டு இருக்கிறார்.

இத்தகைய குற்றச்சாட்டு சிறைத் துறைக்கு மட்டும் தனியானது அல்ல. மக்களை கட்டுப்படுத்தி, அவர்களின் சுதந்திரத்தை ஒழுங்கு முறைக்குள் அடக்குகின்ற அதிகாரம் பெற்ற பொலிஸ் மற்றும் சிறைத்துறை ஆகிய இரண்டுக்குள்ளேயுமே இத்தகைய அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள், அராஜகங்கள் தாராளமாக இடம்பெறுகின்றமையை மறுப்பதற்கில்லை.

மனித நாகரிக வாழ்க்கை முறைமையைக் கொண்ட மேலைத் தேசங்கள் பலவும் இது விடயத்தில் தத்தமது பொலிஸ் மற்றும் சிறைத்துறைகளை சர்வதேச நியமங்களுக்கு அமைவாக ஒழுங்குப்படுத்தி பல தசாப்தங்கள் கடந்து விட்டன. ஆனால் அது விடயத்தில் இலங்கை இன்னமும் அநாகரீக உலகத்தில் சிக்கிக் கிடக்கின்றது.

உலகம் முழுவதும் மேலை நாடுகளில் பொலிஸ் நிலையங்கள் மற்றும் சிறை வளாகங்களில் சி.சி.ரி.வி. கண்காணிப்புக் கமராப் பதிவுகள் தாராளமாகப் பொருத்தப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு துறைகளிலும் அதிகாரிகளின் எல்லை மீறிய அராஜகங்களை - அடாவடித்தனங்களை - இந்த ஒரு கருவியே பெருமளவில் கட்டுப்படுத்த முடியும். அதைச் செய்யாமல் அரசுத் தலைவர்களும் அமைச்சர்களும் வெறும் வாய் வியாக்கியானம் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

பொலிஸ் நிலையங்களிலும், சிறை வளாகங்களிலும் சி.சி.ரி.வி. கமராக்களைப் பொருத்தினால் நாடு தன்பாட்டில் நாகரிக உலகத்துக்குள் புகுந்து விடும். அதைச் செய்வதற்கு சிறை துறையினரையும் பொலிஸாரையும் இணங்க வைக்க அதிகார மேலாண்மையும், லாயக்குமற்ற அரசியல் தலைமைகள் வாய்ச்சவடால் மிரட்டல்களை விடுத்துக் கொண்டிருக்கின்றன. அவ்வளவுதான்.

# மட்டக்களப்பில் கார் விபத்தில் சிறுமி உட்பட இருவர் மரணம்!

## பெண் ஒருவர் படுகாயம்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள வந்தாறுமூலையில் இருந்து களுவங்கேணி நோக்கிப் பயணித்த கார், இரண்டாவது மையில் கல் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை மீறி வீதியை விட்டு விலகி பனை மரத்துடன் மோதிய விபத்தில் காரைச் செலுத்தி சென்றவர் மற்றும் 15 வயது சிறுமி உயிரிழந்ததுடன் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 4.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு, சின்ன ஊறணி, கருவப்பங்கேணி, செலியன் வீதி இரண்டாம் குறுக்கைச் சேர்ந்த ஜெந்திர குமார் சஞ்சய், கருவப்பங்கேணி மற்றும் நாவலர் வீதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியான பிரதீபன் தவஸ்வாணி ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த பெண்ணின் கணவர் வெளிநாட்டில் இருந்து வரும் நிலையில் உயிரிழந்த சிறுமியான மகளுடன் கருவப்பங்கேணியில் உள்ள அவர்களது பன்றி வளர்க்கும் பண்ணையைப் பார்ப்பதற்காக சம்பவ தினமான நேற்று அதிகாலை கார் சாரதியுடன் பயணித்தபோது கார் வேகக் கட்டுப்பாட்டை மீறி பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் சாரதியும் 15 சிறுமியும் உயிரிழந்துள்ளனர்.

படுகாயமடைந்த சிறுமியின் தாயாரான பாலச்சந்திரன் மோகனகாந்தி மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கார் - மோ. சைக்கிள் விபத்து! ஆண்கள் இருவர் படுகாயம்!!











(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, புல்மோட்டை பிரதான வீதியின் இரணைக்கேணியில் இன்று நண்பகல் இடம்பெற்ற கார் – மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு ஆண்கள் பலத்த காயமடைந்த நிலையில் குச்சவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காரைச் செலுத்தி வந்தவர் காயங்கள் இன்றி தப்பியுள்ளார். எனினும், கார் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன பலத்த சேதமடைந்துள்ளன.

திருகோணமலையில் இருந்து புல்மோட்டை நோக்கி ஒரே திசையில் பயணித்த போது, கார் திடீர் என வலது புறமாகத் திரும்ப முற்பட்டுள்ளது. இதையடுத்தே விபத்து இடம்பெற்றுள்ளது என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

இது தொடர்பான விசாரணைகளைக் குச்சவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தென்மராட்சிப் பிரதேசத்தைப் பிரித்து அபிவிருத்தி செய்யுமாறு கோரிக்கை!

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரித்துத் தென்மராட்சிக்கான அபிவிருத்தியை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சாவகச்சேரிப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரனிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கோரிக்கைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தென்மராட்சிப் பிரதேசத்தை இரண்டாக பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை காலாகாலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த கால நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இது தொடர்பாக கோரிக்கை முன்வைத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.




தென்மராட்சிப் பிரதேசம் கிழக்கே எழுதுமட்டுவாழையும்,மேற்கே நாவற்குழி கடல் ஏரியையும், வடக்கே வரணி தொடக்கம் முள்ளிவரையும், தெற்கே பூநகரிக் கடல் ஏரியும் அதன் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

தென்மராட்சியில் பாரம்பரியமாக 138 கிராமங்களும்,60 நிர்வாக கிராம சேவகர் பிரிவுகளும் காணப்படுகின்றன.

அத்துடன் சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரிப் பிரதேசசபை ஆகிய இரண்டு உள்ளூராட்சி சபைகளும் இதில் அடங்குகின்றன.

பரந்துபட்ட நிலப்பரப்பைக் கொண்ட தென்மராட்சியில் 24 ஆயிரத்து 641 குடும்பங்களைச் சேர்ந்த 73 ஆயிரத்து 394 அங்கத்தவர்கள் உள்ளனர்.

எனவே சிறந்த பொருளாதார உட்கட்டமைப்பு, அபிவிருத்தி வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்தத் தென்மராட்சிப் பிரதேசத்தை இரண்டாக பிரிக்க ஆவண செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அத்துடன் கடிதப் பிரதிகளை வடக்கு ஆளுநர், அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலர் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் மனிதவள நிலைய யோகாதின நிகழ்வு!





(பழுவூரான்)

மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் விவேகானந்த மனிதவள மேம்பாட்டு நிலையம் நடத்திய சர்வதேச யோகா தின நிகழ்வு கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தஜி மகராஜ் மற்றும் உதவிப் பொது முகாமையாளர் சுவாமி உமாதீஷானந்தஜி ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஊவா வெல்லஸ பல்கலைக்கழக நூலகர் கலாநிதி ரி.பிரதீபன் விஷேட அதிதியாகவும்,மட்டக்களப்பு மாநகர நகரபிதா சிவம் பாக்கியநாதன், பிரதி நகரபிதா வைரமுத்து தினேஸ்குமார் மற்றும் மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தரும், ஸ்ரீ இராமகிருஷ்ணமிஸன் குருகுல பழைய மாணவர் சங்கத் தலைவருமான கே.மதிவண்ணன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்கள் மற்றும் யோகா நிபுணர்களால் கண்கவர் யோகா அளிக்கை செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் அளிக்கை செய்த மாணவர்கள் மற்றும் அதிதிகள் நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு யோகாவில் சாதனை படைத்த மாணவர்கள் பதக்கம் அணிவிக்கப்பட்டுச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த யோகா நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சாரணத் தலைவர்களுக்கான பயிற்சி நெறி





**(றிபாஸ்)**

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரண தலைவர்களுக்கான மூன்று நாள் பயிற்சி நெறி அக்கரைப்பற்று பெல்ஸ் அகடமியில் நடைபெற்றது.

பயிற்சிக் குழுவின் தலைவர் யூ. எல். எம்.ஹாசிம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஏ.பீ.எம்.எச்.கொல்டிங்ஸ் தவிசாளர் ஏ.பீ. மனாறூல் ஹுதா பிரதம அதிதியாகவும், மாவட்ட ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை, ஆர். சசிதரன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இதேவேளை, மாவட்டத்தின் சாரணர் செயற்பாடுகளுக்கும், சாரணர் தொகையை அதிகரிப்பதற்கும் எதிர்காலத்தில் முழுமையான உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்குவார் என்று பிரதம அதிதி மாவட்ட ஆணையாளர் உட்பட ஏனைய உதவி ஆணையாளர்களிடமும் வாக்குறுதி அளித்தார்.




# அநுர அரசு வழங்கிய வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்றி வருகின்றது!

## தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. தெரிவிப்பு







(வாலகிருஸ்ணா)

கடந்த காலங்களில் இருந்த அரசுகள் பல வாக்குறுதிகளை வழங்கியது. வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றவில்லை என்று பல விடயங்களை எதிர்க்கட்சியினர் விமர்சனங்களுக்கு உள்ளாக்கி இருந்தார்கள். இன்று அந்த விமர்சனங்களையும் தாண்டி அரசு வழங்கிய வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்றி வருகின்று.

தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு இவ்வாறு தெரிவித்தார்.

“கிராமிய பாதை அபிவிருத்தி திட்டம்” எனும் தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் கிராம வீதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டமானது உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் ஓர் அங்கமாக மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சத்துருக்கொண்டான் கும்பிலாமடு வீதியைக் கொங்கிரீட் வீதியாக மாற்றும் வேலை திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்த வகையில் வீதியின் ஆரம்ப வேலைகளை ஆரம்பிக்கும் முகமாக வீதிக்கான அடிக்கல் வைக்கும் நிகழ்வு கிராம அபிவிருத்தி சங்க ஒத்துழைப்புடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் முன்னெடுக்கப்பட்டது.

615 மீற்றர் நீளம் கொண்ட இந்த வீதியானது 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மூன்று மாத செயற்றிட்டமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வீதி புனரமைப்பு பணிகள் இடம்பெறவுள்ளன.

இதனை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்துவைத்தார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ஜே.ஜே.முரளிதரன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.சிவப்பிரியா, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட பிரதம பொறியியலாளர் பி.பரதன், தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று குழு உறுப்பினர் திலகநாதன், தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அணி தலைவியும் மாநகர சபை உறுப்பினருமான வனிதா, திணைக்கள அதிகாரிகள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் பிரபு,

பாதைகள் மற்றும் பாலங்கள் அமைப்பது தொடர்பில் இந்த எங்களது முதலாவது கன்னி வரவுச் செலவுத் திட்டத்தில் இந்த அபிவிருத்தி திட்டங்களுக்காக 14 பில்லியன் ரூபாவை நாங்கள் ஒதுக்கீடு செய்திருக்கின்றோம். அதன் ஊடாகப் பல ஆயிரம் வீதிகளை அமைப்பதற்காகக் குறிப்பாகக் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக முன்னாயத்தம் மேற்கொண்டிருக்கின்றோம்.

அதேபோன்று இன்றைய தினம் எமது வீதி அபிவிருத்தி அமைச்சின் விமல் ரத்தநாயக்கவின் தலைமையின் கீழ் இன்று முதலாவது வேலைத் திட்டமாக நாடு முழுவதும் இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்திருக்கின்றோம். அந்த அடிப்படையில் மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட இந்த வீதியை முதலாவதாக ஆரம்பிப்பதற்கான வேலைகளை முன்னெடுத்திருந்தோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தமாக 14 வீதிகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது அதற்கான எதிர்கால வேலை திட்டங்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மேற்கொண்டு இருக்கின்றார்கள்.

கடந்த காலங்களில் நாங்கள் பல வாக்குறுதிகளை வழங்கியதாகவும் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று பல விடயங்களை எதிர்க்கட்சியினரும் விமர்சனங்களுக்கு உள்ளாக்கி இருந்தார்கள். இன்று நாங்கள் அந்த விமர்சனங்களையும் தாண்டி நாங்கள் வழங்கிய வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்றி வருகின்றோம்.

அந்த அடிப்படையில் கிராமிய வீதிகளை கிராமப்புற மக்கள் எதிர்நோக்குகின்ற வீதிகள் தொடர்பான பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வாக இந்தத் திட்டங்களை ஆரம்பித்திருக்கின்றோம். இன்னும் பல விடயங்களை நாங்கள் செயல்படுத்த தயாராக இருக்கின்றோம் வீதி தொடர்பான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக இந்த மூன்று வருட கால பகுதிக்குள் நாங்கள் அனைத்து வீதிகளையும் புனரமைப்பதற்கும் வீதிகளை அமைப்பதற்காகவும் நாங்கள் வேலைகளை மேற்கொண்டு இருக்கின்றோம்.

ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி நிதிகளை நாங்கள் கோரி இருக்கின்றோம் அதனூடாக கூட இந்த வீதிகளை செப்பனிடுவதற்கு விதிகளை அமைப்பதற்கான பாலங்களை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கின்றோம்.

அரசு என்கின்ற செய்தியில் ஜனாதிபதி கடந்த காலங்களில் அவரது செயல்பாடுகள் மூலமாக மக்கள் மத்தியில் ஒரு வரவேற்பு பெற்ற ஜனாதிபதியாக இருந்திருக்கின்றார். மக்களின் ஒரு பிரதிநிதியாக மக்களின் ஆதரவை பெற்ற ஒரு ஜனாதிபதியாகவும் அவர் செயற்பட்டுக் கொண்டு இருக்கிறார். ஆகவே மக்கள் நலம் சார்ந்ததாக இந்த தேசிய மக்கள் சக்தி செயற்பட்டு கொண்டிருக்கின்றது.

உங்களது தேவைகளை நாங்கள் அறிந்து அதற்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு இருக்கின்றோம் ஆகவே இவ்வாறான வேலை திட்டங்களை தொடர்ச்சியாக செயல்படுத்த உங்களது ஆதரவு தேவை. அதேபோன்று இந்த நாட்டின் மறுமலர்ச்சிக்காகவும் இந்த நாட்டைச் செழிப்பாக மாற்றி அமைப்பதற்காக ஒரு முயற்சியாகவும் முதல் கட்டமாக இந்த விடயங்களைச் செய்து கொண்டிருக்கின்றோம்.– என்றார்.

# தேசிய விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி; மன்னார் மாணவி வரலாற்றுச் சாதனை!





**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட தேசிய விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் பிரிவு 8,9 இல் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி அ. நயோலின் அப்றியானா மாகாண மட்ட போட்டியில் முதலாம் இடத்தையும், தேசிய மட்ட ஒலிம்பியாட் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று வரலாற்று சாதனை புரிந்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மாகாண மட்ட போட்டியில் முதலாம் இடத்தையும், மஹரகம ஜனாதிபதி கல்லூரியில் கடந்த ஆவணி மாதம் நடைபெற்ற தேசிய மட்ட ஒலிம்பியாட் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

அவருக்குச் சான்றிதழ் கல்வி அமைச்சில் வெள்ளிக்கிழமை (20) கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் டாக்டர் மதுர செனவிரத்னவால் வழங்கப்பட்டது.

இவருடன் வட மாகாணத்தை சேர்ந்த இரு மாணவர்கள் இரண்டு இரண்டாம் நிலைகளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியில் வடமாகாண மாணவர்கள் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் மாகாணங்களுக்கிடையிலான தரப்படுத்தல் வரிசையில் வட மாகாண மாணவர்கள் வடமாகாணத்திற்கு முதல் இடத்தைப் பெற்றுக் கொடுத்தது.



# யாழ். பல்கலைக் கழக சட்டத்துறை ஆரம்பிக்கப்பட்டு 20 ஆண்டுகள்!

## விசேட நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டத் துறை ஆரம்பிக்கப்பட்டு இருபது ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டுப் பல்கலைக்கழக சட்டத்துறையின் ஏற்பாட்டில் விசேட நிகழ்வு ஒன்று இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (29) காலை 9 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டி.நவாசும் கௌரவ விருந்தினராக சட்டத்தரணி மாலா சபாரத்தினமும் சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி பி.என்.தம்புவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கோசலை மதன் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

அத்துடன் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தொடர்பான ஆவணப் படம் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய, இலங்கை சட்டக் கல்லூரி அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பிரசாந்தலால் டி அல்வீஸ், சட்டத்தரணி எல்.இளங்கோவன், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து, சட்டத்தரணி எர்மிசா டெகல், சட்டத்தரணி லக்ஸ்மனன் ஜெயகுமார் ஆகியோர் பங்கேற்கும் குழு விவாதம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவா-தி நிஸாந்தவின் நெறியாள்கையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.



### கண் பார்வை அற்றவர்கள் பயன்படுத்தும்

# வெள்ளைப் பிரம்பை மேம்படுத்திய வவுனியா த.ம.ம. வித்தி. மாணவர்!

கண் பார்வை அற்றவர்கள் பயன் படுத்தும் மேம்படுத்திய வெள்ளைப் பிரம்பை மேம்படுத்திய வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தை சேர்ந்த மாணவர்கள், ஆளுநர் செயலகத்தில் நேற்று திங்கள் கிழமை (23) வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனைச் சந்தித்துத் தமது புத்தாக்கம் தொடர்பில் தெரியப்படுத்தினர்.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தை சேர்ந்த லின்டன் ஜெனிஸ் அறோன் அஜேய் மற்றும் திருச்செல்வம் செர்வின் ஆகிய தரம் எட்டில் கற்கும் மாணவர்களே இதனை மேற்கொண்டனர்.

கண் பார்வையற்றவர்கள் பயன் படுத்தும் வெள்ளைப் பிரம்பை இலத்திரனியல் உபகரணங்களை கொண்டு பல்வேறுபட்ட வசதிகளை மேம்படுத்தி அவர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் வகையில் இந்தக் கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கண்டுபிடிப்பானது எதிர் காலத்தில் சட்ட விதிமுறைகளுக்கு அமைய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் கண்பார்வையற்றவர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த மாணவர்களின் கண்டு பிடிப்பு தொடர்பில் கண் மருத்துவ சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் மு.மலரவன் தெரிவிக்கையில், வவுனியா பல்கலைக் கழகத்தின் வழிகாட்டுதலுக்கு அமைய மாணவர்களின் கண்டுபிடிப்பை பதிவு செய்வதற்கு உரிய நடவடிக்கையை மேற் கொள்ளுவதற்கு உதவ தயார் என்றார்.

இயலாமைக்கு உள்ளானவர்களுக்கான தேசிய சபை அங்கத்தவர் வெ. சுப்பிரமணியம் கருத்து தெரிவிக்கையில், கண்டுபிடிக்கபட்ட கருவியில் இன்னும் சிறிய மேம்படுத்த வேண்டிய செயல்பாடு உள்ளது என்றும், அதனை நிவர்த்தி செய்து பயன் பாட்டுக்கு வந்தால் விழிப்புலன் அற்றவர்களுக்கு மிகவும் உதவியாக அமையும்.– என்றார்.

இந்த மாணவர்கள் இருவரையும் ஆளுநர் வாழ்த்தியதோடு இவ்வாறான புத்தாக்க கண்டுபிடிப்புகள் எமது மாணவர்கள் மத்தியில் இருந்து இன்னும் பல தோற்றம் பெறவேண்டும். அவை எமது மக்களுக்கு பயன்படக் கூடிய வகையில் உருவாக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

இந்த மாணவர்கள் மேலும் இதனை மேம்படுத்தி கண்பார்வை அற்றவர்களுக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆதரவு அளிப்போம் எனவும் தெரிவித்தார்.







# மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய கலாச்சார இசை நிகழ்ச்சி

(ஹஸ்பர் ஏ.எச்.)

சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய மட்ட இசை நிகழ்ச்சி மேலதிக மாவட்ட அரச அதிபர் எஸ்.சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

முதற்கட்டமாக கிழக்கு மாகாண மட்ட போட்டிகள் திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்றது. இதில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள மாற்றுத் திறனாளிகள் சமூக சேவைகள திணைக்களத்தால் வழங்கப்பட்ட தலைப்புகளுக்கு அமைவாக போட்டி நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினர்.

இந்தப் போட்டி நிகழ்வில் திருகோணமலை மாவட்டம் முதலாம் இடத்தைப்பெற்றதுடன் தேசிய மட்ட போட்டிக்கும் தெரிவாகியுள்ளது

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் (சமூக சேவை) த. பிரணவன், கோமரண்கடவெல உத்தியோகத்தர் அ செல்வகுமார் குச்சவெளி உத்தியோகத்தர் ம. குகதாசன் பட்டிணமும் சூழலும் உத்தியோகத்தர் கௌரிதாஸ் மற்றும் மட்டக்களப்பு மற்று மற்றும் அம்பாறை மாவட்டத்தின் இணைப்பாளர்களும் கலந்து கொண்டனர்.



# யாழ்ப்பாணம் பண்ணை வீதியின் அவலத்தால் மக்கள் சிரமத்தில்!

## கவனிக்குமா யாழ். மாநகர சபை?



யாழ்ப்பாணம், பண்ணை சுற்று வட்டத்தில் இருந்து மீன்சந்தைக்குச் செல்லும் வீதியில் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளதால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

நீண்ட காலமாக இந்தக் குழிகள் காணர்ராடுகின்றன. இதனால் வீதியால் பயணிப்போர் விபத்துகளை எதிர்கொள்ள வேண்டிய அவலத்துக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் மழை நேரங்களில் இங்குள்ள குழிகளில் வெள்ளம் தேங்குவதால் புதிதாகப் பயணிப்போர் குழிகளின் ஆழம் தெரியாது வாகனங்களைச் செலுத்துகின்றனர். இதனால் வாகனங்கள் பழுதடையும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த விடயத்தில் உரிய அதிகாரிகளும் யாழ். மாநகர சபையினரும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# மன்னாரில் மாணவர்களுக்கு போசாக்கு மாதத விழிப்புணர்வு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

தேசிய போசாக்கு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் போசாக்கான உணவுகளை உண்ணும் பழக்கத்தை வலுப்படுத்தும் முகமாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை இணைந்து ஏற்பாடு செய்த விசேட விழிப்புணர்வு நிகழ்வு மன்னார் சித்தி விநாயகர் இந்து கல்லூரியில் இடம் பெற்றது.

“பழங்களும் மரக்கறிகளும் எப்போதும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும் எனும் தொனிப்பொருளில்” இடம்பெற்ற குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின் மாணவ மாணவியர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



இலங்கையில் ஆண்டுதோறும் அதிகரிக்கும் தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவதற்கான ஆரோக்கியமான உணவு பழக்க வழக்கம் மற்றும் அன்றாட உணவுகளில் தவிர்க்கப்பட வேண்டிய உணவுகள் தொடர்பில் மாணவர்களுக்கு தெளிவூட்டும் விதமாக குறித்த விழிப்புணர்வு நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டது.

அதேநேரம் சுகாதார உத்தியோகஸ்தர்களால் தயாரிக்கப்பட்ட உடலுக்கு தீங்கு ஏற்படுத்தாத சிற்றுண்டி பரிமாறப்பட்டது. அன்றாட உணவுப் பழக்கங்களில் நாம் பின்பற்ற வேண்டிய நடைமுறை தொடர்பான மேடை நாடகமும் மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டது.

நிகழ்வில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வினோதன், மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி ரூபன் லம்பேர்ட், மன்னார் பொது சுகாதார அதிகாரிகள், பரிசோதகர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.





# நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் அமுதவிழா முதலாம் நாள் நிகழ்வு!

யாழ்ப்பாணம், நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமுதவிழா நிகழ்வுகளில் முதல் நாள் நிகழ்வுகள் சனிக்கிழமை நடைபெற்றன.

கடந்த (21) சனிக்கிழமையும் மறு நாள் ஞாயிற்றுக்கிழமையும் மாலை 6.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகி இடம்பெற்றன.

ஆசிரியர் திருமதி தாட்சாயினி கணேச நாதன் தலைமையில் சங்கிலியன் அரங்கில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிராம அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி கஜானி பார்த் தீபனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி சுகன்யா அரவிந்தன், யாழ். மாநகர சபை உறுப்பினர் திருமதி சரஸ்வதி சுகிர்தராஜ், யாழ். பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் அலுவல கத்தைச் சேர்ந்த திருமதி தயாபரன் மலர்மகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விசேட நிகழ்வாகக் கலாநிதி க.சிதம் பரநாதனின் அரங்க செயற்பாட்டுக் குழுவினரின் பறையும் பாடலும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

தொடர்ந்து மன்றத்தில் நடைபெறும் வகுப்புகளில் கல்வி கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் மன்றத் தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

தொடர்ந்துமன்றத்தில்அறநெறிவகுப்பு களில் கற்ற மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

















# கவி கண்ணதாசன் கடவுளின் வரமே...!

## (இன்று கவியரசரின் பிறந்த தினம் அதற்கான கவிதை)



நீறுடை நெற்றி குங்குமப் பொட்டு
உருத்திராட்ச மாலை உயர்ந்திடு தோற்றம்
நல்ல நிறமும் களையான முகமும்
நாட்டுக் கோட்டை நமக்கீந்த கொடையே

ஆத்தீகம் அகத்தில் நிறைந்தே இருந்தது
அனைத்தும் கடவுளே அவரது நினைப்பே
எழுதிக் குவிக்க எண்ணம் எழுந்தது
ஏறினார் வண்டி சென்னையை நோக்கி

அறிமுகம் இல்லா நிலையில் வந்தார்
ஆண்டவன் கருணையை நம்பியே நின்றார்
எழுதும் வாய்ப்பு இறையால் விளைந்தது
எழுதினார் எழுதினார் எழுதிக் குவித்தார்

இடையில் அவரும் இருளில் சிக்கினார்
நாத்திக வலையில் சிக்குண்டு தவித்தார்
பேசா வார்த்தைகள் பேசியும் நின்றார்
எழுதாக் கருத்துகள் எழுதியும் இருந்தார்

நீறுடை நெற்றி குங்குமப் பொட்டு
மாறியே போனது மனதும் இருண்டது
வாழ்க்கையில் போலியைக் கண்டார் அவரும்
மனந் தடுமாறி மயக்கமாய் நின்றார்

இருளில் இருந்ததை உணர்ந்தார் அவரும்
இறைவனே அவரைத் தாங்கிப் பிடித்தார்
அழுதார் தொழுதார் அடைக்கலம் ஆகினார்
ஆண்டவன் அருளால் மீண்டார் அவரும்

ஆத்மீக வெளிச்சம் அவருள் பதிந்தது
கடவுளின் தாசனாய் ஆனார் அவரும்
கண்ண தாசன் புதியாய் மலர்ந்தார்
கவிமழை பொழிந்தர் கடவுளும் மகிழ்ந்தார்

காஞ்சியை எதிர்தவர் காஞ்சியை வணங்கினார்
காஞ்சிப் பெரியவர் ஆசியைப் பெற்றார்
கீதையைப் படித்தார் கீழ்க்குணம் ஒழித்தார்
பாதையை மாற்றிப் பரமனைப் போற்றினார்

திருமுறை படித்தார் சேவித்தார் புராணத்தை
திருமூலர் கருத்தைச் சிந்தையில் கொண்டார்
கம்பனைப் படித்தார் கண்டார் இராமரை
பக்தியில் திளைத்து பாடினார் நாளெலாம்

கண்ணன் கருணை கவிஞரைப் பற்றிட
எண்ணம் எல்லாம் கண்ணன் ஆகினார்
கண்ணின் தாசன் கண்ணனைப் பாடினார்
பாடிய அனைத்தும் பக்திக் காவியமானது

ஆழ்வார் பாட்டில் அமிழ்ந்தார் கவிஞர்
ஆண்டாள் நாச்சியார் ஆகினார் கவிஞர்
பஜ கோவிந்தம் பக்தியின் வடிவமாய்
கவிஞரின் தமிழில் எழுந்துமே வந்தது

கிருஷ்ண கவசம் கிருஷ்ண கானம்
கிருஷ்ண அந்தாதி கவிஞரின் படைப்பாய்
பக்தியாய் மலர்ந்து பலருளம் பதிந்தது
வித்தகத் கவியாய் விரிந்தார் பக்தியில்

அத்வைதம் துவைதம் பாட்டில் இருந்தது
சித்தாத்தம் வேதாந்தம் சிறப்பாய் அமைந்தது
ஆழ்வார்கள் நாயன்மார் கருவாய் அமைந்தார்
அனைத்துக் கருத்தும் பாட்டில் மிளிர்ந்தது

காதல் பாட்டிலும் கவலைப் பாட்டிலும்
கண்ணனை புகுத்த மறந்ததே இல்லை
வெள்ளித் திரைக்கே பாடல் எழுதினார்
எழுதிய பாடற்குள் இறையையே நிறைந்தார்

தத்துவப் பாடல்கள் எத்தனை எத்தனை
முத்து முத்தான கருத்துகள் பொதிந்தன
சித்தர்கள் அனைவரும் சேர்ந்தே வருவதை
அத்தனை பாடல்கள் அனைவர்க்கும் உணர்த்தும்

காலத்தால் அழியாப் பாடல்கள் தந்த
கவி கண்ணதாசன் கடவுளின் வரமே
மாநிலம் பயனுற மக்களும் பயனுற
வழங்கிய கவிதைகள் வாழுமே நாளும்

கவிஞராய் மலர்ந்தவர் கதைகளும் எழுதினார்
திரைக்கதை வசனம் எழுதியும் ஒளிர்ந்தார்
அவரின் எழுத்தை அகிலம் போற்றிட
அர்த்தமுள்ள இந்துமதம் ஔடதம் ஆனது

வாழக் கூடா வழியில் சென்றேன்
வழி தடுமாறி குழியில் விழுந்தேன்
புத்தி புகட்ட நானே தகுந்தவன்
என் வழி போகாதிருங்க ளென்றார்

கண்ண தாசன் பாடமாய் இருக்கிறார்
கடவுளின் அருளால் கவிதைக்குள் நுழைந்தார்
பக்தியைப் பற்றி பற்பல படைத்தார்
படைத்த அனைத்தும் பசுந்தமிழ் சொத்தே!



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
மேனாள் தமிழ் மொழிக்கல்வி இயக்குநர்
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

# மேற்கு வங்கம், கேரளா உட்பட 4 மாநிலங்களில் இடைத்தேர்தல்

## குஜராத்தில் பா.ஜ.க, ஆம் ஆத்மி ஒரு தொகுதியில் வெற்றி

நான்கு மாநிலங்களில் 5 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடந்த இடைத்தேர்தலில், குஜராத்தில் ஆளும் பா.ஜ.க, ஆம் ஆத்மி கட்சி தலா ஒரு தொகுதிகளை கைப்பற்றின. கேரளா, குஜராத், பஞ்சாப், மேற்குவங்கம் ஆகிய 4 மாநிலங்களில் 5 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு கடந்த 19 திகதி இடைத்தேர்தல் நடைபெற்றது. அவற்றில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன.

கேரளாவில் உள்ள நிலாம்பூர், குஜராத்தில் உள்ள விஸவாதர் மற்றும் கடி, பஞ்சாபில் மேற்கு லூதியானா, மேற்கு வங்கத்தில் காளிகஞ்ச் ஆகிய 5 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. குஜராத் மாநிலம் விஸவாதர் தொகுதியில் ஆம் ஆத்மி எம்.எல்.ஏ. பூபேந்திர பயானி, பதவியை இராஜினாமா செய்துவிட்டு பா.ஜ.க.வில் இணைந்தார். அதனால் அங்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. அங்கு ஆம் ஆத்மி கட்சியை சேர்ந்த கோபால் இடாலியா வெற்றி பெற்றார். பா.ஜ.க. வேட்பாளர்



கிரித் படேலை விட கோபால் 17,581 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

அதேநேரத்தில் குஜராத்தின் கடி தொகுதி பட்டியல் இனத்தவருக்காக ஒதுக்கப்பட்டது. இங்கு பா.ஜ.கவின் ராஜேந்திர சவ்தா, காங்கிரஸ் கட்சியின் ரமேஷ் சவ்தாவை 38,904 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். இந்தத் தொகுதியில் பா.ஜ.க. எம்எம்ஏ கர்சன்பாய் சோலங்கி காலமானதால் இடைத்தேர்தல் நடந்தது.

கேரளாவின் நிலாம்பூரில் சுயேச்சை எம்.எல்.ஏ. பிவி அன்வர் பதவியை இராஜினாமா செய்தார். அதனால் இடைத்தேர்தல் நடந்தது. கேரளாவில் ஆளும் இடதுசாரி கூட்டணி வேட்பாளர் ஸ்வராஜை விட, காங்கிரஸ் வேட்பாளர் ஆர்யதன் சவுகத் 11,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இது ஆளும் கொம்யூனிஸ்ட் கட்சிக்கு பின்னடைவாக கருதப்படுகிறது.

பஞ்சாப் மாநிலம் மேற்கு லூதியானா ஆம் ஆத்மி எம்.எல்.ஏ. குர்பிரீத் பஸ்ஸி காலமானார். அதனால் இடைத்தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் ஆம் ஆத்மி வேட்பாளர் சஞ்சீவ் அரோரா 35,179 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இவரை எதிர்த்து போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் பரத் பூஷன் அஷூ 24,542 வாக்குகள் பெற்று 2 ஆவது இடம் பிடித்துள்ளார்.

மேற்கு வங்க மாநிலத்தில் காளிகஞ்ச் தொகுதியில் திரிணமூல் காங்கிரஸ் எம்.எல்.ஏ. நசிருதீன் அகமது காலமானார். இந்தத் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் வேட்பாளர் அலிஃபா அகமது வெற்றி பெற்றுள்ளார்.

# மேற்கு வங்க சட்டப்பேரவையிலிருந்து 4 பா.ஜ.க எம்.எல்.ஏக்கள் இடைநிறுத்தம்

மேற்கு வங்க சட்டபேரவையில் இருந்து தீபக் பர்மன், சங்கர் கோஷ், அக்னிமித்ர பால் மற்றும் மனோஜ் ஓரான் ஆகிய நான்கு பா.ஜ.கவின் எம்.எல்.ஏக்களை எஞ்சிய கூட்டத்தொடர் முழுவதும் பதவி இடைநிறுத்தம் செய்து சபாநாயகர் பிமன் பானர்ஜி உத்தரவிட்டுள்ளார்.

அவையில் முன்பு கூறப்பட்ட சில கருத்துகளை நீக்குவது தொடர்பான விவாதத்தின்போது இந்த எம்.எல்.ஏக்கள் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் சபாநாயகர் இந்த முடிவை எடுத்துள்ளார்.



இதுகுறித்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட எம்.எல்.ஏக்கள் கூறுகையில்,

“ நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமையை பயன்படுத்தினோம். ஆனால், மார்ஷல்கள் வரவழைக்கப்பட்டு வெளியேற்றப்பட்டோம். எதிர்க்கட்சிகளின் குரல் சபைக்குள் தொடர்ந்து அடக்கப்படுகிறது.” என்றனர்.

பா.ஜ.க. தலைவவர் அமித் மாளவியா கூறுகையில்,

“ஆளும் கட்சியின் அடக்குமுறையை தட்டிக்கேட்கும்போது எதிர்க்கட்சிகளின் குரல்வளை நெரிக்கப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் சட்டமன்ற நடைமுறைகளை தவறாக பயன்படுத்துகின்றனர். மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி மற்றும் அவரது அரசு நியாயமற்ற முறையில் சர்வாதிகார தோரணையில் செயல்படுகிறது. மேற்கு வங்கம் அறிவிக்கப்படாத அவசரநிலையை எதிர்கொண்டுள்ளது.” என்றார்.

# அனுமதியின்றி பதாகை வைத்த த.வெ.கவினர் மீது வழக்கு பதிவு

விஜய் பிறந்த நாளுக்கு அனுமதி இன்றி விதிகளை மீறி பதாகை வைத்ததாக, த.வெ.கவினர் மீது பொலிஸார் 53 வழக்குகள் பதிவு செய்துள்ளனர்.

தவெக தலைவர் நடிகர் விஜய்யின் 51 ஆவது பிறந்தநாள் விழா நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. அவரது தொண்டர்களும், ரசிகர்களும் பிறந்தநாளை உற்சாகமாக கொண்டாடினர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் த.வெ.கவினர் பதாகைகள் வைத்து விஜய்க்கு வாழ்த்து தெரிவித்தனர்.

உரிய அனுமதி இன்றி பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்த பதா



கைகளை பொலிஸார் அப்புறப்படுத்தினர். அப்போது, சில இடங்களில் பொலிஸாருக்கும், த.வெ.க. தொண்டர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதேபோல், சென்னையிலும் தி.நகர், வடபழனி உள்பட பல்வேறு பகுதிகளில் த.வெ.க. சார்பில் பதாகை வைத்து விஜய்க்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. பொது இடங்களில் அனுமதி இன்றி, பொது மக்களுக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் பதாகை வைக்கப்பட்டதாக புகார் எழுந்தது.

இதையடுத்து, அனுமதி இன்றி, விதிகளை மீறி விஜய் பிறந்தநாள் பதாகை வைத்ததாக கூறி. த.வெ.கவினர் மீது 53 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த விவகாரம் தொடர்பாக, பொலிஸார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# இஸ்ரேல் - ஈரான் போர் நிறுத்தம்: டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்

இஸ்ரேல் - ஈரான் இடையிலான 12 நாள்கள் யுத்தம், அடுத்த 24 மணி நேரத்தில் முடிவுக்கு வருவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ட்ரூத் சமூக வலைதளத்தில் வெளியிட்ட தகவலில்,

“அனைவருக்கும் வாழ்த்துகள்! இஸ்ரேல் - ஈரான் இடையே 12 மணி நேரத்தில் முழுமையான போர் நிறுத்தம் ஏற்படும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த கட்டத்தில் போர் முடிந்ததாகக் கருதப்படும்.

அதிகாரபூர்வமாக, ஈரான் இந்த போர் நிறுத்தத்தை தொடங்கும். 12 ஆவது மணி நேரத்தில், இஸ்ரேல் இந்த போர் நிறுத்தத்தை தொடங்கும். 24 ஆவது மணி நேரத்தில், இந்த 12 நாள் போரின் அதிகாரபூர்வ முடிவு, உலகத்தால் வரவேற்கப்படும். ஒவ்வொரு போர் நிறுத்தத்தின் போதும், மறுபக்கம் அமைதியும் மதிப்பும்



நிலவும். எல்லாம் சரியாக நடக்கும் என்ற அனுமானத்தில், இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய இரு நாடுகளும் இந்த 12 நாள் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு சகிப்புத்தன்மை, தைரியம் மற்றும் புத்திசாலித்தனம் பெற்றதற்கு நான் வாழ்த்துகிறேன்.

இது பல ஆண்டுகளாக நடந்து, முழு மத்திய கிழக்கையும் அழித்திருக்கக் கூடிய ஒரு போர். ஆனால், அது நடக்கவில்லை. ஒருபோதும் அப்படி நடக்காது. கடவுள் இஸ்ரேலை ஆசிர்வதிப்பாராக. கடவுள் ஈரானை ஆசிர்வதிப்பாராக. கடவுள் மத்திய கிழக்கை ஆசிர்வதிப்பாராக, கடவுள் அமெரிக்காவை ஆசிர்வதிப்பாராக. கடவுள் உலகை ஆசிர்வதிப்பாராக” என்று ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளையில், இந்த போர் நிறுத்த அறிவிப்பை இஸ்ரேல் மற்றும் ஈரான் தரப்பு உடனடியாக உறுதி செய்யவில்லை. இரு தரப்புமே தாக்குதல்களை தொடர்ந்த வண்ணம் உள்ளன.

முன்னதாக, தங்களது 3 முக்கிய அணுசக்தி நிலையங்களை தாக்கி அழித்த அமெரிக்காவுக்கு பதிலடி கொடுக்க ஈரான் முடிவு செய்தது. அதன்படி, கட்டாரில் உள்ள அமெரிக்க இராணுவத் தளத்தை குறிவைத்து ஈரான் பாலிஸ்டிக் ஏவுகணைகளை வீசியது. இதன் காரணமாக மத்திய கிழக்கில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. உடனடியாக கட்டார், ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன் உள்ளிட்ட நாடுகள் தங்கள் வான் பரப்பை முழுவதுமாக மூடியதும் குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலுடன் போர் நிறுத்தம் இல்லை என ஈரான் அறிவிப்பு

இஸ்ரேலுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் எதுவும் இல்லை என்றும், இஸ்ரேல் தாக்குதல்களை நிறுத்தினால், தாமும், தாக்குதல்களை நிறுத்த முடியும் என்று ஈரானின் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே முழுமையான போர் நிறுத்த ஒப்பந்தம் எட்டப்பட்டதாக, டொனால்ட் ட்ரம்ப் கூறிய கூற்றை அரக்சி மறுத்துள்ளார்.

உள்ளூர் நேரப்படி அதிகாலை 4 மணிக்குள் இஸ்ரேல் தனது வான் வழித் தாக்குதல்களை நிறுத்தினால், தெஹ்ரான் தனது தாக்குதல்களை நிறுத்தும் என்று ஈரானின் வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்

ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சியின் கருத்து, ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையேயான போர் நிறுத்தம் குறித்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின்



அறிவித்தலுக்கு பின், ஈரானிடமிருந்து வரும் முதல் அதிகாரப்பூர்வ கருத்தாக அமைந்துள்ளது.

அரக்சி, தெஹ்ரான் நேரப்படி அதிகாலை 4:16 மணிக்கு சமூக ஊடகத்தில் இந்த செய்தியை பதிவிட்டுள்ளார்.

“தற்போது வரை, எந்தவொரு போர் நிறுத்தம் அல்லது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவது குறித்தும் எந்த ஒப்பந்தமும் இல்லை.

இருப்பினும், இஸ்ரேல், ஈரானிய மக்களுக்கு எதிரான அதன் சட்டவிரோத ஆக்கிரமிப்பை தெஹ்ரான் நேரப்படி அதிகாலை 4 மணிக்குள் நிறுத்தினால், அதன் பிறகு தமக்கும் பதிலடியைத் தொடர நோக்கம் இல்லை என்று அவர் அந்த பதிவில் கூறியுள்ளார்.

தங்கள் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவது குறித்த இறுதி முடிவு பின்னர் எடுக்கப்படும் என்று அரக்ச்சி மேலும் கூறியுள்ளார்

இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்காக அதைத் தண்டிக்க, தங்கள் சக்தி வாய்ந்த ஆயுதப் படைகளின் இராணுவ நடவடிக்கைகள் கடைசி நிமிடம் வரை, அதிகாலை 4 மணி வரை தொடர்ந்தன.


அனைத்து ஈரானியர்களுடனும் சேர்ந்து, எங்கள் அன்பான நாட்டை தங்கள் கடைசி சொட்டு இரத்தம் வரை பாதுகாக்கத் தயாராக இருக்கும், எதிரியின் எந்தவொரு தாக்குதலுக்கும் கடைசி நிமிடம் வரை பதிலளித்த எங்கள் துணிச்சலான ஆயுதப் படைகளுக்கு நான் நன்றி கூறுகிறேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

# பிலிப்பைன்ஸில் நிலஅதிர்வு

பிலிப்பைன்ஸில் 6.2 மெக்னிடியூட் அளவிலான நிலஅதிர்வு ஏற்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குக் கிழக்கே, 10 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலஅதிர்வு மையம் கொண்டிருந்ததாக வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இந்த அனர்த்தம் குறித்து இதுவரை எந்த சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கனடா முரசு
செவ்வாய்க்கிழமை 24/06/2025

**கத்தி குத்து தாக்குதலில் ஒருவர் உயிரிழப்பு**

**சந்தேக நபர் கைது**

கனடாவின் டொரொன்டோ நகரில், வில்சன் அவென்யூ மற்றும் பெவர்லி ஹில்ஸ் டிரைவ் அருகே இடம்பெற்ற கத்தி குத்து தாக்கு 03



# ஆல்கொன்கின் தேசிய பூங்காவில் சிக்கியிருந்த தாயும் மகனும் மீட்பு

**கனடாவின் ஆல்கொன்கின் தேசிய பூங்காவின் சிக்கியிருந்த தாய் மற்றும் மகனை பாதுகாப்பாக மீட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

**பூங்காவின் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் கம்பிங் சென்றிருந்த ஒரு தாய் மற்றும் அவரது 13 வயது மகனை, கடும் இடியுடன் கூடிய புயலுக்குப் பிறகு மீட்புக் குழுவினர் காப்பாற்றினர்.**

**நார்த் டிபோ லேக் அருகே கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இந்த மீட்பு நடவடிக்கை நடைபெற்றது.**

**புயலின் போது, ஒரு மரம் அவர்களின் கூடாரம் மீது விழுந்ததில், சிறுவன் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.**

“தாயார் அவசர சிக்னலை ஒரு சாதனத்தில் இயக்கியதன் மூலம், மீட்புப் படையினருக்கு அவர்களின் இருப்பிடத் தகவல் அனுப்பப்பட்டது என தெரிவிக்கப்படுகின்றது.

வானிலை மோசமாக இருந்ததால் ஹெலிக்கொப்டர் மூலம் மீட்பு முடிய வில்லை. அதனால், மீட்பாளர்கள் மரங்களால் அடைத்த காடுகள் மற்றும் சிக்கலான பாதைகள் வழியாக 25 கிலோமீற்றர் பயணித்து, இரு வரையும் மீட்டுள்ளனர். சிறுவனுக்கு முதலுதவி அளித்து, பின்னர் விமானம் மூலம் மருத்து வமனைக்கு கொண்டு சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கொலைக் குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபர் கைது

கனடாவில் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் தேடப்பட்டு வந்த நபரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

டொரொன்டோ நகரின் கிழக்குப் பகுதியில் 35 வயது நபரை குத்திக் கொன்றதாகக் கண்டறியப்பட்ட சந்தேகநபர், ஒரு வார விசாரணையின் பின் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆண்டனி ஸ்டீவன் ஒலிவேரா (வயது 24) என்ற நபர், நிரந்தர முகவரி இல்லாதவர் எனக் கூறப்படுகிறது. அவருக்கு முதன்மைப்படுகொலை குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி இரவு 11 மணி அளவில், டான்ஃபோர்த் அவென்யூ மற்றும் காக்ஸ்வெல் அவென்யூ அருகே உள்ள பிளாசா பின்புறம்,



இரு ஆண்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறின் போது, அஷ்கன் பௌர்நாசிர்-ரூட்பேன் (வயது 35) என்பவர் பலமுறை குத்தப்பட்ட நிலையில் மீட்கப்பட்டார்.

எனினும், காயமடைந்த நபர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டபின் உயிரிழந்தார்.

பாதிக்கப்பட்டவர் தனிமையில் இருந்ததாலும், தப்பிக்கவோ எதிர்த்துப் போராடவோ முடியாத சூழ்நிலையில் இருந்ததாலும், குறிவைக்கப்பட்டிருக்கலாம் என விசாரணை அதிகாரி ஹென்றி மார்ஸ்மன் கூறினார்.

இந்த சம்பவம் டொரொன்டோ நகரில் 2025 ஆம் ஆண்டு ஏற்பட்ட 16 ஆவது கொலைச் சம்பவமாகும். ஒரு வார விசாரணையின் பின்னர், ஒலிவேரா, ஞாயிற்றுக்கிழமை நயாகரா பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.



# ஹமில்டனில் இருமாடி வீடு தீப்பிடிப்பு; பெண் உயிரிழப்பு

கனடாவின் ஹமில்டன் நகரில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொருவர் புகை மூச்சுத்திணறல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் ஹமில்டன் கிழக்குப் பகுதியில் உள்ள 29 மான்ஸ் அவென்யூ அருகே நண்பகல் நேரத்தில் நிகழ்ந்ததாக ஹமில்டன் தீயணைப்பு துறை தெரிவித்துள்ளது.

தீயணைப்பு படைவீரர்கள் வீட்டை சோதனையிட்ட போது, தீயில் சிக்கி உயிரிழந்த ஒரு பெண்ணை இரண்டாம் மாடியில் கண்டுபிடித்தனர்.

மேலும், அவசர சேவை குழுவினர் வருவதற்கு முன் உள்ளே செல்ல முயன்ற அயலவர் ஒருவர் புகைச் சுவாசம் காரணமாக மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு விட்டதாகவும், அப்போது வீட்டில் வேறு யாரும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


தீயணைப்பு படைவீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் பிற உயிருக்கு ஆபத்தான காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இன்று நிகழ்ந்த தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு, ஹமில்டன் தீயணைப்பு துறையின் சார்பில் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று தீயணைப்பு துறை தலைவர் டேவிட் கன்லிஃப் தெரிவித்தார்.

வீட்டு சேதத்துக்கான ஆரம்ப மதிப்பீடு சுமார் 500,000 டொலர்கள் எனக் கூறப்பட்டுள்ளது.








# கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்தில் கட்டுப்பாடின்றி பரவும் தட்டம்மைநோய்

கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்தில் தட்டம்மை தொற்றுக்கு ஆளானோர் எண்ணிக்கை 1,000 ஐ தாண்டிவிட்ட நிலையில், தொற்று நோய் சிகிச்சை நிபுணர்கள், நிலைமை கைமீறிப்போய்விட்டதாக எச்சரித்துள்ளார்கள்.

கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்தில் மண்ணன், தட்டம்மை அல்லது மணல்வாரி என்னும் வைரஸ் தொற்று வேகமாகப் பரவிவருகிறது.

மார்ச் மாதம் துவங்கி, இதுவரை 1,020 பேருக்கு தட்டம்மைத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எட்மண்டனிலுள்ள Stollery சிறார் மருத்துவமனையில் குழந்தைகளுக்கான தொற்றுநோய் சிகிச்சை மருத்துவராக பணியாற்றிவரும் வைத்தியர் கரினா, நாம் ஏராளமானோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதையும், சில மரணங்களையும் பார்க்கபோகிறோம் என எச்சரிக்கிறார்.

கடந்த மாதத்தில் தட்டம்மையால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ள நிலைமையில், நிலைமை கைமீறிப்போய்விட்டது என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே, ஆல்பர்ட்டா மாகாணத்தில் தடுப்பூசி பெறாத பிள்ளைகள் உடனடியாக தடுப்பூசி பெறுவதை உறுதி செய்துகொள்ளுமாறு மருத்துவர்கள் பெற்றோரை வலியுறுத்தி வருகின்றனர்.




## கத்தி குத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், கத்தியால் காயமடைந்த இரண்டு நபர்களை மீட்டதாகவும் அவர்கள் இருவரும் 50 வயது ஆண்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிறிது நேரத்திலேயே உயிரிழந்தார்.

மற்றொரு நபர் உயிருக்கு ஆபத்தில்லாத நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இது தொடர்பாக 70 வயதுடைய ஒருவர் சம்பவ இடத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதல் இடம்பெற காரணம் மற்றும் கைது செய்யப்பட்ட நபருக்கும் காயமடைந்தவர்களுக்கும் உள்ள தொடர்பு குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

மேலும் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்கள் எவரும் தப்பியோடவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.